# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2238/28 - 2021 ජූලි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.29

*2238/28 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

### மதுவரி அறிவித்தல்

பூல்புரூப் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை

*திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிய, 2178/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய 2128/30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/2019 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலைத் திருத்தம் செய்து 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2208/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி அறிவித்தல் இல. 01/2021 என்பதாக வெளியிடப்பட்ட பின்வரும் கட்டளை 2021, ஏப்பிறல் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

1. விதி இல. 3 இல்,

(அ) முதலாம் காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியிலுள்ள "2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர்" என்ற சொற்களையும் இலக்கங்களையும் பிரதியீடு செய்வதன் மூலம், மற்றும்

(ஆ) இரண்டாம் காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியிலுள்ள "2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர்" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர்" என்ற சொற்களையும் இலக்கங்களையும் பிரதியீடு செய்வதன் மூலம்.

2. விதி இல. 13 இலுள்ள "561 நாட்கள்" என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பதிலாக "742 நாட்கள்" என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்வதன் மூலம்.

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, யூலை 29

08-204